திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு






திருப்பாணாழ்வார்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

**நவம்பர் 2020**

மலர்–01 இதழ்–09


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| **இந்துக்கடவுள்கள் : ஸ்ரீமஹாலக்ஷ்மி**<br>- திருமதி பா. காயத்ரி, கேரளா. | 32 |
| **பன்னிரு ஆழ்வார்கள் : திருப்பாணாழ்வார்**<br>- திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை. | 34 |
| **கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீபிரசன்ன வேங்கடேச தாசர்**<br>- திருமதி ராணிலக்ஷ்மி, கேரளா. | 36 |
| **சித்திரக்கதை : பத்மசரோவரம்**<br>கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.<br>தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.<br>சித்திரம் : திரு. கெ. துவரகநாத். | 38 |
| **நீதிக்கதைகள் : பக்தி அன்பினால் மட்டுமே மலரும்**<br>- திரு. சத்யதாரா, சென்னை. | 42 |
| **சிறந்த சிறுவன் : செல்வி. எஸ். பவ்யா** | 44 |
| **புதிர் : வினா–விடை**<br>செல்வன் மு. முத்துராம் சுந்தர், செங்கோட்டை. | 45 |
| **சித்திரம் வரைதல்** | 46 |


முன்னட்டை : ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார்

பின்னட்டை : நரகாசுர வதம் (சித்திரம்)

பிரம்மாண்ட நாயகனான ஸ்ரீநிவாசனின் குறைவிலா செல்வத்தின் செல்வ நாயகியாக விளங்கும் ஸ்ரீதேவிக்கு ஸ்ரீ பத்மாவதி, அலர்மேல்மங்கை, மலர்மகள் என பல பெயர் கள் உண்டு. ஸ்ரீமகாலக்ஷ்மியை ஐச்வர்யம் மற்றும் தனத்தின் தேவியாக வழிபடுவர். ஸ்ரீதேவி என்றும் கமலத்தில் பத்மாசனத்தில் அமர்ந்தார்போல், மேல் இரு கரங்களில் கமலத்தை ஏந்தி கீழ் இரு கரங்களில் அபயம் மற்றும் வரத முத்திரையைக் காண்பித்து, மடியில் தங்கக் குடத்திலிருந்து தங்கக்காசுகள் விழுவதுபோன்று காட்சியளிப்பார்.

விஷ்ணு புராணம், வாயு புராணம், பத்ம புராணம் முதலியவை ஸ்ரீமகாலக்ஷ்மி தேவி பாற்கடலிலிருந்து தோன் றினாள் என்று கூறுகிறது.தூர்வாசர் அத்ரி, அனசூயையின் புதல்வராவர். தூர்வாச முனிவருக்கு மஹாலக்ஷ்மி தாயாரின் அருளால் மாலை ஒன்று கிடைத்தது. ஐராவதத் தின் மீது சவாரி செய்யும் தேவராஜன் இந்திரனைக் கண்டு தூர்வாசமுனி அம்மாலையை அவருக்குப் பரிசாக அளித்தார். இந்திரனும் அதனை ஐராவதத்தின் தலையில் அணிவித்தார். ஆனால் அம்மாலை யின் நறுமணம் தாங்க முடியாத ஐராவதம், அதனைத் தன் தும்பிக்கையால் கீழே போட்டு கால்களால் மிதித்து விட்டது. இச்செயலைக் கண்டு சினங் கொண்ட தூர்வாசர், “இந்த மாலை கீழே விழுந்தது போல உன் ராஜ்ஜிய பதவியும்,



## ஸ்ரீமகாலக்ஷ்மி

– திருமதி பா. காயத்ரி,
கேரளா.

ஐச்வர்யமும் போய்விடட்டும்” என்று, அகந்தையில் இருந்த இந்திரனை சபித்தார்.

பின்பு, ஸ்ரீதேவி தேவர்களிடமிருந்து மறைந்துவிட, அவர்கள் துர்பலமாகி, அசுரர்களால் வெல்லப்பட்டு, பின்பு அதற்கு ஒரு தீர்வு காண மகாவிஷ்ணுவிடம் சரணடைந்தனர். மகாவிஷ்ணு அசுரர்களின் உதவியுடன் பாற்கடலைக் கடையும் உபதேசித்தார். அங்ஙனே பாற்கடல் கடைந்த போது வந்த பொக்கிஷங்களுடன் ஸ்ரீதேவியும் தோன்ற, ஸ்ரீஹரி அவளை மணந்தார்.

இங்ஙனே, பாற்கடலிலிருந்து உதித்த ஸ்ரீதேவி சிறப்பாக சில இடங்களில் வசிக்கிறாள். அவையாவன : உள்ளங்கை, சந்தனம், யானையின் மத்தகம், திருவிளக்கு, கோமியம், தாமரை, நெல்லி மரம், தானியக் குவியல், திருமால் திருமார்பு முதலியன விசேஷமாக கூறப்படுகிறது. தினமும், எழுந்தவுடன் நம் உள்ளங்கையை பார்க்கவேண்டும் என்று இதனால் தான் சான்றோர்கள் கூறினார்கள். அதாவது, ஸ்ரீதேவியின் அருளைப் பெறவே.

“கமலத்தில் பத்மாசனத்தில் அமர்ந்து, வாத்ஸல்ய குணம் நிறைந்தவளாய், வேங்கடாசலபதியின் திருமார்பில் வாசம் செய்து அவருக்கு அமைதி அளிக்கும் ஜகந்மாதாவை வணங்குகிறேன்”, என்று ஸ்ரீவேங்கடேச பிரபத்தி கூறுகிறது. இங்ஙனே, பகவானுக்கு அமைதி அளித்து தக்க சமயத்தில் நமக்காக பரிந்துரைத்து, நம்மீது கருணை காட்டும்படி செய்கிறாள் ஸ்ரீமகாலக்ஷ்மி தேவி.

எனவே, நாமும் ஜகந்மாதாவாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியை சரணடைந்து, அவள் அருளை பெற்று, அதன்மூலம் ஜகத் பிதாவாகிய ஸ்ரீஹரியின் கருணையும் பெற்று அனைத்து நலன்களுடனும், வளங்களுடனும், ஐச்வர்யத்துடனும் வாழ்வோம்!!!

திருப்பாணாழ்வார் சோழ நாட்டில் உறையூர் என்ற ஊரில் துர்மதி வருடம், கார்த்திகை மாதம், ரோகிணி நட்சத்திரத்தில், பாணர் குலத்தில் அவதரித்தார். இவர் திருவரங்கத்து அரங்கன் மீது பக்தி கொண்டு காவேரிக்கரையிலே யாழை மீட்டி அரங்கனை மனத்தாலே நினைத்து பாடல்களை பாடுவார். ஒருநாள் லோக சாரங்க முனிவர் என்பவர் பெருமாள் திருமஞ்சனத்துக்கு தீர்த்தம் எடுத்துச் செல்ல காவிரி துறைக்கு வர, அங்கு தன்னை மறந்து அரங்கனைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்த திருப்பாணாழ்வாரை விலகச் செய்ய எண்ணி ஒரு கல்லை எடுத்து அடித்தார். நினைவு வரப் பெற்ற ஆழ்வார் அபசாரப்பட்டோமே என்று விலகினார். அரங்கன் தன் திருக்கதவை அடைத்து, லோகசாரங்கரிடம் "ஆழ்வாரை அழைத்து வாரும்" என்று கட்டளையிட்டார்.



அவரும் வந்து அழைக்க, ஆழ்வார் "அரங்கனின் ஆலயத்தை காலால் மிதியேன்" எனக்கூற, லோகசாரங்கர் தன் தோள்களி னாலே தூக்கிக் கொண்டு ஆலயத்திற்குள் சென்றார்.

ஆலயத்தில் அரங்கனின் சன்னதியில் அரங்கன் அரு ளாலே ஞானக்கண்ணால் பகவானைக் கண்ட திருப்பாணாழ் வார் "அமலனாதிபிரான்" என்ற திவ்யப் பிரபந்த பாசுரங்களை அருளினார்.

மொத்தம் பத்து பாட்டுக்கள் கொண்ட இப் பிரபந்தத்தில் முதல் பாசுரத்தை "அமலன்" என்றும், இரண் டாம் பாசுரத்தை "உவந்த" என்றும், மூன்றாம் பாசுரத்தை "மந்திபாய்" என்றும் தொடங்கியதால் "அ,உ,ம" என்ற மூன் றெழுத்தின் கூட்டாகிய ப்ரணவத்தின் விளக்கமே அமலனாதி பிரான் என்று ஸ்வாமி தேசிகன், "முனிவாஹன போகம்" என்ற தமது உரைநூலில் அருளிச் செய்தார்.

முதல் எட்டு பாட்டால் ஆழ்வார் பெருமாளின் திருவடி முதல் திருமுடி வரை அவயவ அழகை அனுபவித்து, ஒன்பதாவது பாட்டில் சமுதாய சோபையை வருணித்து, பத்தாவது பாட் டிலே ***"என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"*** என்று முடித்தார்.

திருவரங்கன் கருவறையின் உள்ளே நுழைந்து, கண் ணாரக் கண்டு, அவ்வனுபவ முதிர்ச்சியால் பேரானந்த முற்று எழுந்த பாடல்களே அமலனாதிபிரான் ஆகும். அழகிய மண வாளன் திருப்பாணாழ்வாரை திருமேனியோடே அகிலரும் காணும்படி அவன் திருவடிகளிலே சேர்த்துக் கொண்டான்.

– திரு. ஜெ. சுவாமிநாதன்,
சென்னை.



பிரசன்ன வேங்கட தாசர் 17 ஆம் நூற்றாண்டில் கடப்பிரபா ஆற்றின் கரையில் உள்ள பாகலகோட்டில் பிறந்தார். அவர் விஜயதாசரின் சம காலத்தில் வாழ்ந்தார்.

பிரசன்ன வேங்கடதாசர் மிகவும் இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தார். அவர் பல பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இது போன்ற பிரச்சனைகளால் சோர்ந்து போன அவர் திருமலை சென்றார். அங்கு அவர் ஒரு ஹரிதாசர்கள் குழுவை பார்த்தார். உடனே, அவரும் ஹரிதாசராக வேண்டும் என்று முடிவு செய்தார். அவர் சுவாமி புஷ்கரணியில் குளித்து விட்டு ஸ்ரீஸ்ரீநிவாசர் ஆலயத்திற்குச் சென்று, உயிரை விடுவது போல் அவர் முன் விழுந்தார். ஸ்ரீஸ்ரீநிவாசர் அவரை எழுப்பி, அவருக்கு ஹரிதாச தீக்ஷை கொடுத்தார். அதுவரை பிரசன்ன வேங்கடதாசர் முற்றிலும் ஏதுமறியாதவராக இருந்தார். ஆனால் இறைவனின் அருளால் அவர்



# ஸ்ரீபிரசன்ன வேங்கட தாசர்

ஆங்கிலம் மூலம் : திருமதி எ. கீதா வீரராகவன்
தமிழாக்கம் : திருமதி ராணிலக்ஷ்மி

அனைத்து வேதங்களையும் பற்றிய தெய்வீக அறிவையும் கவிதை திறமையையும் அடைந்தார்.

விஜயதாசரைப் போலவே, பிரசன்ன வேங்கட தாசருக்கும் புரந்தர தாசர் மீது மிகுந்த பக்தி இருந்தது. அவர் புரந்தர தாசரை தந்தையாகவும் மற்றும் குருவாகவும் அழைத்தார். அவரது அடிச்சுவடுகளை பின்பற்றினார். இதனால் மிகுந்த ஈடுபாடு கொண்டு தனது சொந்த கீர்த்தனைகளை இசையமைக்கத் தொடங்கினார். அவர் பல புதிய சொற்களை உருவாக்கியுள்ளார்.அவற்றில் சுமார் 200 சொற்கள் தார்வாட் மற்றும் பிஜாப்பூர் மாவட்டத்தில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன.

பிரசன்ன வேங்கடதாசர் தனது கீர்த்தனைகளில் தினசரி பயன்படுத்தப்படும் சாதாரண சொற்களைப் பயன்படுத்துவதில் ஒரு சிறப்பு உண்டு. அவரது படைப்புகள் அமைதியான தன்மை, நட்பு, பாசம், உதவியற்ற தன்மை மற்றும் இறைவனின் திருக்கமல பாதங்களில் அடிப்பணிவதை பிரதிபலிக்கின்றன. அவை எளிமையானவை மற்றும் உள்ளத்தை உருக்கும் அளவிற்கு பக்தி பொங்கி விளங்கும்.

அவரது படைப்புகளில் கன்னட பாகவதா மிகவும் பிரபலமானது. இக்காலத்திற்கு ஏற்ப உலக விருப்பத்திற்கு அவர் மிகவும் புத்திசாலித்தனமாக தனது படைப்புகளை இயற்றியுள்ளார். புரந்தரதாசரைப் போலவே பிரசன்ன வேங்கடதாசர் சமூக தூய்மைக்கும் தனிப்பட்ட தூய்மைக்கும் (மனதால் தூய்மை) அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். அவர் பாசாங்கு, மோசடி மற்றும் செயற்கைத்தன்மை ஆகியவற்றை விமர்சித்தார்.


நம் குருவின் பக்திக்கு சமமான பக்தியுடன் நாம் பக்தி செலுத்த வேண்டும். அப்பொழுது வாழ்வில் நாம் நினைப்பதை அடையலாம் என்பார்.

# சித்திரக் கதை


# பத்மசரோவரம்

கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம் : திரு.கெ. துவாரக நாத்




ஸ்ரீஸ்ரீநிவாசர் அந்த எட்டு தங்கத் தாமரைகளை அக்குளத்தில் நட்டார்
நான் நட்டு வைத்த எட்டு தாமரைகள் ஆயிரம் தங்கத் தாமரைகளாக மலர்ந்தன
ஸ்ரீஸ்ரீநிவாசர் குளத்தின் கிழக்கு திசையில் சூரிய நாராயணரையும் பிரதிஷ்டை செய்தார்
பாஸ்கரா! இக்குளத்தை தாங்களே காக்க வேண்டும்
தங்கள் கட்டளை! அப்படியே செய்கிறேன் ஸ்வாமி!
ஸ்ரீஸ்ரீநிவாசர் அக்குளத்தில் நீராடி விட்டு, மூன்றாயிரம் முறை மஹாலக்ஷ்மி மந்திரம் துதித்து, ஆயிரம் தங்கத் தாமரை மலர்களால் தாயாரை வழிபட்டார். பசுவின் பாலை மட்டுமே உட்கொண்டு வந்தார். நாரத முனிவர் ஸ்வாமி அருகில் வந்து...
ஸ்வாமி தவத்தினால் சோர்வடைந்துள்ளீர்! தவத்தை நிறுத்தி விடலாமல்லவா?
பிராட்டியின் கருணை கிடைக்கும் வரை தவத்தை நிறுத்த மாட்டேன்!


பிறகு சுகமுனியுடன் மற்ற முனிவர்களும் வந்து ஸ்ரீஸ்ரீநிவாசரை வணங்கினர்
ஸ்வாமி! தாங்கள் தவத்தை நிறுத்தலாம் அல்லவா!
பிராட்டியின் கருணை கிடைத்த பிறகே தவத்தை நிறுத்துவேன்
முனிவர்கள் பாதாளத்தில் இருந்த மஹாலக்ஷ்மியிடம் சென்று...
தாயே! ஸ்வாமி தங்களுக்காக கடினமாக தவத்தை மேற்கொண்டுள்ளார். பத்ம சரோவரத்திற்கு உடனே வாருங்கள்!
கபில முனிவரும் மஹாலக்ஷ்மியிடம் கூறுகிறார். அப்பொழுது..
சரி... உங்கள் கோரிக்கையை ஏற்று வருகிறேன்


கார்த்திகை மாதம், சுத்த பஞ்சமி, உத்தராடம் வெள்ளிக்கிழமை முனிவர்களின் முன்னிலையில்...
அதோ ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர்ந்தது. அதிலிருந்து அவதரிக்கும் தாயார்
ஸ்வாமியிடம் சென்று மாலையை அணிவித்து ஸ்வாமியை தரிசிக்கிறார் தாயார்
ஸ்வாமி என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்–
தேவி! என் வக்ஷஸ்தலமே உன் நிவாசம்
வியூக லக்ஷ்மியாக ஸ்வாமியின் இதயத்தில் எழுந்த ருளினார் தாயார்
அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!
முற்றும்.

நீதிக்கதைகள்

# பக்தி என்பது ஆடம்பரத்தில் இல்லை... அன்பினால் மட்டுமே மலரக்கூடியது

– திரு. சத்யதாரா, சென்னை



உஜ்ஜயினி என்ற பட்டிணத்திற்கு அருகில், இறந்து போன சடலங்கள் தகனம் செய்யப்படும் மயானத்தில், ஒரு வெட்டியான் இருந்தான். சவங்களை தகனம் செய்வதும், புதைப்பதற்கு குழி தோண்டுவதும் அவனுடைய பிழைப்பு. ஒவ்வொரு சடலத்தையும் தகனம் செய்யும்போது அந்த ஆத்மா நல்ல கதி அடைந்து சொர்க்கம் செல்ல வேண்டும் என்று பிரார்த்தனை செய்வான். ஒருநாள் தகனம் ஆன சாம்பலை எல்லாம் சுத்தம் செய்து ஒரு குழி தோண்டினான். அப்போது ஒரு சிவலிங்கம் காணப்பட்டது. அந்த நாட்டு மன்னன் ஒரு சிவ பக்தன் என்பதால், பயபக்தியுடன் அதை மன்னனிடம் அளிக்க முடிவு செய்தான். அந்நாட்டு மன்னன் ஆடம்பரமான சிவ பக்தன். வெட்டியான் சிவலிங்கத்தினை எடுத்துக்கொண்டு மன்னனிடம் சென்றான். அது கிடைத்த உண்மையினை கூறி, அதனை முறைப்படி ஒரு ஆலயத்தில் ஆராதனைக்காக ஸ்தாபனம் செய்யுமாறு வேண்டினான்.

மயானத்தில் இருந்து வந்த வெட்டியானை மிகக் கேவலமாக நினைத்த மன்னன் “சுடுகாட்டில் கிடைத்த சிவலிங்கத்தை சுடுகாட்டில் நீயே வைத்துக்கொள்... தினமும் நீ புரட்டிப் போட்டு தகனம் செய்த சவங்களின் சாம்பல் எடுத்து அபிஷேகம் ஆராதனை செய்” என்றான். இறை வழிபாடு பற்றி அறியாத வெட்டியான், மன்னனின் கூற்றினை பய பக்தியுடன் சிரமேற்கொண்டான். அவ்வண்ணமே மயானம் சென்று... சடலங்



கள் தகனம் ஆன சாம்பலை எடுத்து சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து வழிபட்டான். ஒரு நாள் திடீரென மழை பெய்தது. மயானத்தில் இருந்த சாம்பல் முழுவதும் கரைந்து விட்டது. சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ய சாம்பல் இல்லையே என வருந்தினான்.

காய்ந்த விராட்டிகளை அடுக்கி தீயை மூட்டிவிட்டு தனது மனைவியிடம் "நான் இந்த தீயில் விழுகிறேன். என் உடல் தகனமாகும் சாம்பலைக் கொண்டு சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்" என்று கூறி தீயில் வீழ்ந்து விட்டான். தன்னுடைய சாம்பலும் இறைவனின் பூஜைக்கு உதவும் என்று அவனது மனைவியும் தீயில் வீழ்ந்தாள். மயான பணியாட்கள் மூலம், செய்தி மன்னனுக்கு எட்டியது. மயானத்திற்கு விரைந்தான் மன்னன். அங்கு இருவரது பக்தியிலும் உருகிய ஈஸ்வரன் காட்சி தந்து இருவருக்கும் அருள, புதுப்பொலிவுடன் இருவரும் உயிர் மீண்டு எழுந்தனர்.

இந்த காட்சியை கண்டு துடிதுடித்துப்போனான் மன்னன். அரண்மனையில், தங்கத்தால் ஆன சிவலிங்கத்திற்கு விலை உயர்ந்த வாசனைத் திரவியங்களாலும் வழிபாடு செய்த எனக்கு காட்சி தரவில்லை. மயான சாம்பலை வைத்து அபிஷேகம் செய்தவனுக்கு தரிசனம் கிட்டியதே....!

இறையருளை பொழியும் தூய பக்தி ஆடம்பரத்தில் இல்லை... உன்மையான தூய்மையான அன்பினால் மட்டுமே மலரக்கூடியது என்பதை உணர்ந்து கொண்டான்.



# சிறந்த சிறுமி

| | |
|---|---|
| பெயர் | - செல்வி. எஸ். பவ்யா |
| பிறந்த தேதி | - 14-01-2009. |
| படிப்பு | - 7ஆம் வகுப்பு. |
| தந்தை பெயர் | - திரு. பி. கிரீஷ் சந்திரன். |
| தாய் பெயர் | - திருமதி பி.ஜி. ஸ்மிதா. |
| பள்ளி | - நவோதயா வித்யாலயா, திருவனந்தபுரம். |

**திறமைகள் :**

- கர்நாடக சங்கீதம், பரதநாடட்டியம், குச்சுப்புடி, பகவத் கீதை பாராயணம், களரி.
- கர்நாடக சங்கீதம் கற்று 2018 ஆம் ஆண்டு தனது பள்ளியில் ஒளி இசைக்கான முதல் பரிசைப் பெற்றார்.
- பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடி ஆற்றுக்கால் தேவி கோயிலில் அரங்கேற்றம் நடைபெற்றது.
- முரஜபம் தொடர்பான பத்மநாப சுவாமி கோயிலிலும் நாட்டியம் நடைபெற்றது.
- பொங்கல் திருவிழா தொடர்பான ஆற்றுக்கால் தேவி கோயிலில் நடனம் நிகழ்த்தினார்.
- பள்ளியில் நடைபெற்ற பகவத் கீதை போட்டிகளில் தனது குருவான திருமதி லக்ஷ்மி ஷோபா வழிகாட்டுதலின் பேரில் பங்குபெற்றார்.

புதிர்

# "வினா–விடை"

1. ஏழுமலையானின் ஆராதனை மணியின் அம்சமாகப் பிறந்தவர் யார்?

   அ) அன்னமய்யா          ஆ)வேதாந்த தேசிகர்

   இ) திருமலை நம்பி          ஈ) குலசேகராழ்வார்

2. தினமும் ஆயிரம் அடியவருக்கு அன்னமிட்ட ஆழ்வார் யார்?

   அ) திருமங்கையாழ்வார்          ஆ)திருமழிசையாழ்வார்

   இ) அனந்தாழ்வான்          ஈ) திருப்பாணாழ்வார்

3. வேதாந்த தேசிகர் இராமாநுஜர் மீது பாடிய பாடல்?

   அ) ராமாநுஜ நூற்றந்தாதி          ஆ) முதல் திருவந்தாதி

   இ) யதிராஜ ஸப்ததி          ஈ) இரண்டாம் திருவந்தாதி

4. ஸ்ரீராமர் மீது அதீத பக்தி கொண்ட ஆழ்வார் யார்?

   அ) திருப்பாணாழ்வார்          ஆ)குலசேகராழ்வார்

   இ) திருமங்கையாழ்வார்          ஈ) பெரியாழ்வார்

5. பக்திசாரர் என்று குறிப்பிடப்படும் ஆழ்வார்?

   அ) திருமங்கையாழ்வார்          ஆ)திருப்பாணாழ்வார்

   இ) திருமழிசையாழ்வார்          ஈ) பொய்கையாழ்வார்

6) வேதாந்த தேசிகர் ஆண்டாள் மீது பாடிய நூல்?

   அ) கோதா கல்யாணம்          ஆ)கோதா ஸ்துதி

   இ) திருப்பாவை          ஈ) திருவந்தாதி

7) வடபத்ர சாயி என்பதன் பொருள் என்ன?

   அ) ஆலிலையில் துயில்பவன்          ஆ)பாம்பின் மீது நடனமாடுபவன்


   இ) ஆயர்களின் அண்ணன்          ஈ) யசோதையின் மகன்

செல்வன் மு.முத்துராம் சுந்தர், செங்கோட்டை

1) ஆ, 2) அ, 3) இ, 4) ஆ, 5) இ, 6) ஆ, 7) அ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |



நம்பாடுவான்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-10-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

